# கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

# ஈழத்தவர் வரலாறு

-செங்கை ஆழியான்-

தேவநம்பிய தீசன் கி.மு. 247 தொட்டு கி.மு.207 வரை ஆட்சி புரிந்தான். அவனின் பின்னர் உத்தியன் ( கி.மு. 207 - 197) , மகாசிவன் (கி.மு.197 - 187) சூரத்தீசன் (187 - 177) ஆகிய மன்னர்கள் அரசு கட்டிலேறினர். சூரத்தீசன் என்ற சிங்கள மன்னன் அனுராதபுரத்திலிருந்து இலங்கையை ஆட்சி செய்த காலவேளையில் உத்தரதேசத்துக் குறுநில மன்னர்களான சேனன், குத்திக்கள் என்போர் அனுதாரபுரத்திற்கு எதிராகப் படை நடாத்திச் சென்றுள்ளனர். அனுராதபுர மேலாதிக்கத்திற்கு எதிராக நிகழ்ந்த முதலாவது தண்டெடுப்பாக இது வரலாற்றில் உள்ளது.

இவர்கள் இருவரும் எங்கிருந்து படை நடாத்தினர்? உத்திரதேசத்தின் பூநகரிப் பகுதியில் செழிப்பான ஓர் தமிழரசு நிலவியிருந்துள்ளது. அனுராதபுரத்தில் ஆட்சி செய்த தமிழ் மன்னர்களின் சாதனைகளை மறைத்தும் திரித்தும் கூறிய மகாவம்சம் இவர்களை ஆக்கிரமிப்பாளர் , படையெடுப்பாளர், சோழ மரபில் வந்தவர்கள். அக்கரையைச்சேர்ந்தவர்கள் எனக் கூறுகிறது. இதற்கு இவர்கள் அனைவரும் தமிழ் நாட்டிலிருந்து படையெடுத்து வந்து ஆட்சியைக் கைப்பற்றியவர்கள் என்று வரலாற்று ஆசிரியர்களால் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையே வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்து நெருங்கிய வர்த்தக கலாச்சாரத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன என்பதில் சந்தேகமில்லை. இதைப் பாளி இலக்கியங்கள் மட்டுமன்றி சங்க கால இலக்கியங்களும் இலங்கை - தென்னிந்தியப் பிராமிக் கல்வெட்டுக்களும் தொல்பொருட்சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. ஆனால் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரையான தமிழ் நாட்டு வரலாற்று மூலகங்களில் இலங்கையுடனான அரசியல் தொடர்புகள் பற்றியோ, படையெடுப்புக்கள் பற்றியோ எதுவித குறிப்பும் காணப்படவில்லை. அத்துடன் அத்தகைய ஒரு படையெடுப்பை இலங்கை மீது மேற்கொள்ளக்கூடிய அளவுக்குப் பலமான அரசுகள் தமிழ்நாட்டில் இருந்ததாகக் கூறுவதற்கும் இல்லை. மேலும் அனுராதபுரத்தில் ஆட்சி செய்த தமிழ் மன்னர்களின் பெயர்களுக்கும் தமிழ்நாட்டில் ஆட்சி செய்த மன்னர்களின் பெயர்களுக்குமிடையே அதிக ஒற்றுமை இருப்பதாகவும் தெரியவில்லை. இதனால் அனுராதபுரத்தின் மீது படையெடுத்த தமிழர்கள் அனைவரும் தமிழ் நாட்டிலிருந்து படையெடுத்தார்களா அல்லது இலங்கையின் இன்னொரு பிராந்தியத்திலிருந்து படையெடுத்தார்களா என்பது ஆய்வு செய்யப்பட வேண்டியதொன்றாகும். தென்னிலங்கையில் சிற்றரசர்களாக இருந்த பல மன்னர்களே பின்பு, அனுராதபுர மன்னர்களாக மாறியதைப் பாளி நூல்களிலிருந்து அறிய முடிகின்றது. அதே போல வடவிலங்கையில் சிற்றரசர்களாக இருந்த சேனன், குத்திக்கன் , எல்லாளன் போன்ற தமிழ் மன்னர்கள் பின்பு அனுராதபுர மன்னர்களாக மாறியதை நிறுவவேண்டும்.

பூநகரிப் பிரதேசம் உத்தரதேசத்தில் முதன்மையான ஒரு அரசாக விளங்கியுள்ளது என்பதற்கு அண்மையில் இப்பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிச்சாசனங்கள் சான்றாகின்றன. பூநகரிப் பிராமிச் சாசனம் பற்றிக் கருத்துத் தெரிவித்த தமிழ்நாட்டின் முதன்மைச் சாசனவியலாளரான ஜராவரம் மகாதேவன் இச்சாசனம் கி.மு. 3 ஆம் கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் சங்ககாலத்தை ஒத்த தமிழ்வேளரின் ஆட்சி வடவிலங்கையில் இருந்ததை உறுதிப்படுத்துகின்றது என்றார். இப்பிராந்தியத்தில் ஓர் இராசதானி இருந்ததெனக் கருதக்கூடிய கட்டிட அழிபாடுகள் உள்ளன. இதனை யாழ்ப்பாணத்திற்கு முன்னோடியான இராசதானியெனப் புஸ்பரட்ணம் கருதுகிறார். ஈழ, ஈலா என்ற பிராமி எழுத்துக்களைக் கொண்ட இரு மட்பாண்ட ஓடுகள் பூநகரியிப் பிரதேசத்திற்கு ஈழவூர் என இடப்பட்டு பாரம்பரியமாக அழைக்கப்பட்டு வருகிறது. ஏனவே சேனன் , குத்திக்கன் என்போர் இங்கிருந்து அனுராதபுர அரசின் மீது படையெடுத்த குறுநில மன்னர்கள் எனக்கூறமுடியும்.

எனவே, அனுராதபுரத்தை சூரத்தீசன் ஆகிய குறுநில மன்னர்கள் ஒருங்கிணைந்து உத்திரதேசத்திலிருந்து படைநடாத்தி வெற்றி கொண்டனர். இவர்கள் இருவரும் தமிழர்கள் எனவும் குதிரை வர்த்தகர்கள் எனவும் பெரும் சேனையுடன் வந்து சூரத்தீசனை வென்று, 22 ஆண்டுகள் இலங்கையை ஆண்டனர் எனவும் மகாவம்சம் கூறுகின்றது. கி.மு. 177 இலிருந்து கி.மு். 155 வரை இலங்கையில் சேனன், குத்திக்கன் ஆகிய தமிழ் மன்னர்களது ஆட்சி நிலைத்திருந்தது. கதம்ப நதியை (அருவியாறு) அனுராதபுரத்திற்கு அருகாகப் பாய்வதற்கு திசை திருப்பிய பெருமை சேனன், குத்திக்கன் ஆகிய மாமன்னர்களுக்கே உரியது.

தமிழ் மன்னரது ஆட்சி அனுராதபுரத்தில் நிலைத்தவேளை, சூரத்தீசனின் தமையனான மகாசிவனின் புதல்வர்கள் உருகுணைக்கு தப்பி ஓடினர். அவர்களில் ஒன்பதாவது பிள்ளையான அசேலன் கி.மு. 155 ஆம் ஆண்டு படை நடாத்தி அனுராதபுரத்தைக் கைபற்றிக் கொண்டான். அவன் அனுராதபுரத்திலிருந்து 10 ஆண்டுகள் (கி.மு - 155 - கி.மு. 145) அரசாட்சி புரிந்தான். இவ்விடத்து ஓர் உண்மை நோக்குதற்குரியது. தமிழ் மன்னர்கள் உத்தரதேசத்திலிருந்து சேனையுடன் படை நடத்தி அனுராதபுரத்தைக் கைப்பற்றும் போது சிங்கள அரச குடும்பத்தினர் தெற்கே உருகுணைக்குத் தப்பித் தலைமறைவாகினர். அதே போல உருகுணையிலிருந்து சிங்கள மன்னர்கள் அனுராதபுரத்தைக் கைப்பற்றும் போது தமிழ் அரச குடும்பத்தினர் உத்தரதேசத்திற்கு தப்பித் தலைமறைவாகினர். அசேலன் அனுராதபுரத்தைக் கைப்பற்றியபோது அரச குடும்பத்தினர் சிலர் உத்தரதேசத்திற்கு தப்பிச் சென்றனரெனத் துணியலாம். ஏலேலன் கூத்தில் (எல்லாளன்) வரும் 'ஈழசேனன் புத்திரன் ஏலேலன்' என்ற அடிகள் புதிய தகவல்களைத் தரக்கூடியது. அனுராதபுரத்தை 22 ஆண்டுகள் ஆட்சி புரிந்த சேனனின் மகனா எல்லாளன்?

## ஈழராஜா எல்லாளன்

கி.மு. 3 ஆம் நூற்றாண்டிற்கும் (கி.மு.247) கி.மு.1ஆம் நூற்றாண்டிற்கும் (கி.மு.29) இடைப்பட்ட 220 ஆண்டு கால அனுராதபுர அரசின் வரலாற்றை நோக்கினால் இக்கால எல்லைக்குள் ஆட்சி புரிந்த மன்னர்களுள் 8 தமிழ் மன்னர்கள் 81 வருடங்களுக்கு மேல் ஆட்சி புரிந்ததைக் கண்டு கொள்ளலாமி. ஆயினும் இக்கால வரலாற்றைப் பல அத்தியாயங்களில் கூறும் மகாவம்சம் தமிழ் மன்னர்களின் ஆட்சியைச்சில செய்யுட்களில் மட்டுமே கூறி முடிக்கின்றது. எல்லாளன் என்ற தமிழ் மன்னனை வெற்றி கொண்டதன் மூலம் சிங்கள இனத்தின் விடுதலை வீரனாக வர்ணிக்கப்பட்ட துட்டகாமினியின் 24 ஆண்டு கால ஆட்சியை 843 செய்யுட்களில் கூறும் மகாவம்சம் 44 ஆண்டுகள் நீதி தவறாது ஆட்சி நடாத்திய எல்லாளனை 21 செய்யுட்களில் மட்டும் கூறுகின்றது. இது ஒன்றே பாளி இலக்கியங்களில் தமிழ் மன்னர்களின் வரலாறு மறைக்கப்பட்டுள்ளமைக்குச் சிறந்த சான்றாகும்.

அனுராதபுரத்தைச் சேனன், குத்திகன் ஆகிய தமிழ் மன்னர்களிடமிருந்து கைப்பற்றிய அசேலன் என்பான் 10 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். கி.மு. 145 ஆம் ஆண்டு எல்லாளன், உத்திரதேசத்திலிருந்து பெரும்படையுடன் தண்டெடுத்து அனுராதபுரத்தைக் கைபற்றிக் கொண்டான். மீண்டும் இலங்கையின் ஆட்சி தமிழரிடம் வந்து சேர்ந்தது. எல்லாளனைச் சோழ இளவரசனாகவும் தென்னிந்தியாவிலிருந்து படையெடுத்து வந்தவனாகவும் பாளி இலக்கிய நூல்கள் கூறுகின்றன. ஆனால் அத்தகைய ஒரு சோழன் இருந்ததாக தமிழ்நாட்டு வரலாற்றில் ஆதாரங்கள் எதுவுமில்லை. இந்த மன்னன் உத்தரதேசத்தின் ஒரு பகுதியிலிருந்து அனுராதபுரத்தின் மீது படையெடுத்ததாகக் கொள்வதே ஏற்புடையதாகும். ஏனெனில் வவுனிக்குளத்தினை முதன் முதல் கட்டியவன் எல்லாளன் என அடையாளம் காணப்படுகின்றது. உத்தரதேசக்குறுநில மன்னனாக எல்லாளன் முதலில் விளங்கியமையால் தான்



வவுனிக்குளத்தை அக்காலவேளையில் அமைப்பிக்க அவனால் முடிந்தது என ஊகிக்கலாம். ஆங்கிலேய நாட்டவரான எச். பாக்கர் மகாவம்சத்தில் அனுராதபுரத்திற்கு வடக்கேயமைந்துள்ளதாகக் கூறப்ஙபட்ட பெலிலாபியை பூநகரியின் தென்னெல்லையிலுள்ள பாலியாறு என அடையாளம் கண்டு இங்குள்ள வவுனிக்குளத்தின் ஆரம்பத் தோற்றம் எல்லாளனின் சாதனைகளில் ஒன்றாக இருக்கலாமென கூறியுள்ளார். பாளி இலக்கியங்களில் 'எலாரா' என்று அழைக்கப்படும் தமிழ் மன்னன் ஏலேலன், எல்லாளன் எனத் தமிழில் அழைக்கப்பட்டு வருகிறான். உண்மையில் ஈழராஜா என்ற பெயரே பாளியில் எலாரா (எல்லாளன்) என மருவியதாகப் பேராசிரியர் வேலுப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். இது ஏற்றுக்கொள்ளத்தக்க கருத்தாகும். எல்லாளன் இலங்கையை 44 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனின் நீதி தவறாத ஆட்சியைப் புகழ்ந்துரைக்கும் பாளி நூல்கள், இவன் தவறான மார்க்கத்தினை (இந்து மதத்தினை) தழுவியவன் எனவும் கூறப்பின் நிற்கவில்லை. இவன் தனது ஆட்சியில் பௌத்த மதத்திற்கு ஆதரவு அளித்த போதிலும் தன் பழைய மதநம்பிக்கையைக் கைவிடவில்லை என மகாவம்சம் கூறுகிறது. பேராசிரியர் கைகர் இப்பழைய மதநம்பிக்கையென்பது இந்து மதத்தையே குறிப்பிடுவதாகக் கருதுகிறார். எல்லாளன் பகைவர்க்கும் நண்பர்களுக்கும் சமநீதி வழங்கியதாகக் கூறும் மகாவம்சம் அவனது நீதி நெறிதவறாத ஆட்சியை மனு நீதிச் சோழனின் கதைகளோடு இணைத்து விபரித்துள்ளது. எல்லாளனின் சயன அறையில் ஓர் ஆராய்ச்சி மணி கட்டப்பட்டிருந்தது. நீதி வேண்டுவோர் எந்த நேரமும் கோட்டைவாசலில் தொங்கும் கயிற்றை இழுத்து இந்த மணியை ஒலியெழுப்பின் மன்னன் உடன் வந்து விசாரித்துத் துயர் தீர்ப்பான்.

எல்லாளனுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் பிள்ளைகளாவர். ஒரு நாள் ஒரு தேரில் திஸ்ஸவாவியை நோக்கி எல்லாளனின் மகன் பயணப்பட்டபோது வழியில் பசுவுடன் படுத்திருந்த கன்றின் கழுத்தின் மேல் தேர்ச்சில் ஏறியதால் கன்று அவ்விடத்தில் இறந்து விட்டது. தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை இழுத்து அடித்து எல்லாளனிடம் நீதி கேட்டது. எல்லாளன் தனது மகனின் தலையைத் தேர்க்காலிலிட்டு அதேவிதமாக மரணமேற்படுத்தி நீதி வழங்கினான். பாம்பொன்றுக்கு இரையான குஞ்சையிழந்த தாய்ப்பறவை ஆராய்ச்சி மணியை அடித்தது. மன்னன் அந்தப் பாம்பினை பிடித்து வரச்செய்து, அதன் வயிறு கிறப்பட்டு குஞ்சு வெளியில் எடுக்கப்பட்டது. பின்னர் பாம்பு மரத்தில் தொங்கவிடப்பட்டது. ஒரு வயோதிப மாது வெயிலில் அரிசியைக் காயப்போட்டிருந்த போது பருவம் தப்பிப் பொழிந்த மழையால் அரிசி முழுவதும் பழுதடைந்து போனது. அவள் எல்லாளனிடம் முறையிட்டபோது அவ்ன் வருணனிடம் வாரத்திற்கொரு தடவை இரவில் மட்டும் மழை பொழியவேண்டுதல் விடுத்ததாக மகாவம்சம் வர்ணிக்கின்றது. எல்லாளனின் நீதி வழுவாமையைக் கூற முயலும் இக்கதைகள் நம்பகமானவையல்ல. அவனது செங்கோலாட்சியைப் புலப்படுத்த மகாவம்சம் எடுத்துக் கொண்ட ஐதீகக் கதைகள் எனலாம். எனினும் மகாவம்சம் கூறுகின்ற ஒரு கதை எல்லாளன் சமயத்துறையில் பௌத்தத்திற்கு ஆதரவு அளித்தான் என்பதையும் போற்றிப் பாதுகாத்தான் என்பதையும் நிரூபிக்கின்றது. எல்லாளன் தேரிலேறி சேத்திய கிரி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது தேரின் அச்சு தாதுகோபமொன்றில் பட்டு தாதுகோபத்திற்கு சேதத்தை ஏற்படுத்தியது. மன்னன்



தேரினின்றும் கீழே குதித்து தனது தலையை உடனடியாகச் சீவிவிடுமாறு அமைச்சர்களிடம் கூறினான். 'தெரியாமல் நிகழ்ந்தது அமைதியடைக, துாபத்தை திருத்தி விடுவோம்' என்றனர் அமைச்சர்கள். பதினைந்த கற்களே சிதைவடைந்திருந்தன. அப்படியிருந்தும் அந்தத் தாதுகோபத்தை புனரமைக்க எல்லாளன் பதினையாயிரம் கஹாப் பணங்களை செலவிட்டான்.

(தொடரும்)

www.padippakam.com

படிப்பகம்